வெள்ளை இரவு

தில்லைநாதன் பவித்திரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிதையில் வருகின்ற நீலக் கடலும் அலையும் கடல் பற்றிய வலியின் சித்திரங்களும் நிலத்தோடும் வாழ்வோடும் நம்மை கொழுவுகிறது.

நினைவின் சுமைகளும் முகாந்திரங்களும் மரணத்தின் சுவடுகளும் கவிதைகளைப் படித்து முடித்த பிறகும் நினைவில் மணக்கின்றன. நிறையக் கவிதைகள். தேங்காத கால நதியாய் பிரவாகிக்கின்றன. ஒரு இளைய குரலுக்குள் அத்தனை நீரூற்று. போர் எல்லா வடிவிலும் படர்ந்த நிலத்தில் அதன் தாக்கங்கள் தூலமாய் தெரியாத நிலத்தில் ஒரு கவிஞன் தன்னை வரித்துக்கொள்வது தன்னை எரித்துக்கொள்வதற்கு ஒப்பானது. நெருப்பில் நினைந்த இதயத்தில் இருந்து வரும் கவிதைகளில் வெளிச்சம் இருக்கும்.

எம் நிலத்தின் வீரர்கள் எப்படியும் வந்துவிடுவார்கள் என்ற நம்பிக்கையை ஊட்டுவதிலும் இவரின் கவிதைகள் பவித்திரமாய் எழுகின்றன. போரின் அகத்திணையாய் இக் கவிதைகளில் காதலும் பிசுபிசுக்கிறது. தேர்ந்த மொழி, சரியான சொற்கட்டு, கூர்மையான கவி வடிவம் என காலம் செதுக்கிய கவிஞனாக பவித்ரன் இனி கவனம் பெறுவார். பட்டு, உழல்ந்து எழும் ஒரு கவிமனதின் வார்த்தைகளில் கனதி மிகுந்திருக்கும்.

இளம் வயதில் எம் நிலக்கவிகளுக்கு நேர்கின்ற வாதைமிகு வாழ்வு. இந் நிலத்தில் மகத்தான கவிகளை உருவாக்கும் கால விளைவாகவும் மாறுகிறது. அதில் பவித்திரனும் அவரின் தீர்க்கமிகு கவிதைகளும் வரவாகின்றன.

தீபச்செல்வன்,
கிளிநொச்சி.
25.04.2023

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெள்ளை இரவு

தில்லைநாதன் பவித்ரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெள்ளை இரவு
கவிதைகள்
திில்லைநாதன் பவித்ரன்
முதல் பதிப்பு : மே 2023
விலை : உரூபா 600.00
முன்னட்டைப்படம் - பிரவாகினி @ Thara Prabu

VELLAI IRAVU
Poems
Thillainathan Pavithran
176/ B, Lower Road, Orrs Hill, Trincomalee.
thillainathanpavithran@gmail.com +94 77 8191 678
Copyright : © T.Pavithran
First Edition : May 2023
Cover Design : பிரவாகினி @ Thara Prabu

Printed @ SHRIRAM PRINTERS, TRINCOMALEE
0777555738, shriramanathan@hotmail.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளொளியானவர்க்கு...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெள்ளை இரவில்
நம்காலத்தின் ஒளியையும் நிழலையும் கூடக் காணலாம்.

கருணாகரன்

கவிதைகள் உருவாகுவது எப்படி என்றறிய முடியாத மர்மத்தை மேலும் நிரூபிக்கின்றன பவித்ரனின் இந்தக் கவிதைகளும்.

ஓவியத்தில் நிற்கிற மரத்தை வெட்டி அழிக்கவோ எடுத்துச் சொல்லவோ முடியாததைப்போலவே கவிதையில் நிலை கொள்கிற சொற்களையும் அவை உணர்த்தும் அர்த்தத்தையும் எதனாலும் நிர்மூலமாக்க முடியாது.

ஆனால் அவற்றினூடே முடிவற்றுப் பயணிக்கலாம். இந்தப் பயணத்தில் பெறுகின்ற தரிசனம் வாழ்வை ஒளியூட்டுகிறது. காலம், சூழல், வரலாறு, வாழ்க்கை எல்லாற்றிலும் தன்னுடைய அவதானங்களையும் சிந்தனைகளையும் இணைத்து சொற்களின் வழியே இந்தச் சித்திரங்களை உருவாக்கியுள்ளார் பவித்ரன்.

இதனால் இவை காட்சியாகவும் படிமங்களாகவும் நேர் நின்று உரையாடும் குரலாகவும் மாறி ரூபம் கொள்கின்றன. காலத்தைப் பிரதிபலிப்பதாகவும் காலத்தைக் கடந்து நிற்பதாகவும் மாறி மாறி கோலம்காட்டும் இந்தக் கவிதைகளில் நம்காலத்தின் ஒளியையும் நிழலையும் கூடக் காணலாம்.

இந்தக் குரலுக்கு, இந்தச் சொற்களுக்கு, இந்தக் காட்சி களுக்கு, இந்தப் பயணத்துக்கு நம்மைத் தயார்ப்படுத்திக் கொண்டால் நன்மைகள் அதிகம். அதிசயங்கள் அதை விட கூடுதல்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செரிக்கவும் விடாமல் கடந்து போகவும் விடாமல்
தொல்லைப்படுத்தும் "வெள்ளை இரவு".

முனைவர். இ.நா. ஸ்ரீஞானேஸ்வரன்
'மாயன்'

கவிதைகளை யாருக்காக எழுதுகிறான் கவிஞன் என்ற கேள்வியை நாமெல்லோமே கேட்கிறோம். அவன் எழுதுவது தனக்காகவே. கவிதைகள் மட்டுமல்ல எந்தவொரு கலைப்படைப்பும் அதனைச் செதுக்குபவனைத் திருப்திப்படுத்தவே உருவாகின்றது.

அவ்வாறாயின் அக்கலைப்படைப்பு எப்போது வெளியாகின்றது? தானடைந்த திருப்தியை அடுத்தவரும் அடையட்டும் என்று எழுதியவன் நினைக்கின்ற தருணத்தில் அது வெளியிடப்படுகின்றது. வெளியீடு வாசகனுக்கானது. அது படைத்தவனுக்கானது அல்ல. அவ்வாறு வெளியிடப்படுகின்ற கலைப்படைப்பினை வாசகனும் நுகர்ந்து அதனால் திருப்தியடையும் போது அப்படைப்பு வெற்றியைப் பதிவுசெய்கின்றது. படைப்பின் வெற்றி படைத்தவனுக்கு புகழைத்தரும்.

அவ்வகையில் பவித்ரனின் வெள்ளை இரவுகள் வெளியாகின்றது. குறியிடல் கவிதைத் தொகுப்பின் பின் தன்னளவில் மிகப்பெரிய பாய்ச்சலைப் பதிவுசெய்து வெளியாகியுள்ள இக்கவிதைத் தொகுப்பில் வாசகானுபவம் மாய உலகமொன்றை வாசகனுக்கு விரியச் செய்திருப்பதை நாம் அனுபவிக்கலாம்.

இலகுவானதும் பரிச்சயமானதுமான சொற்கள் கவிதைகளுக்கு கனத்தைச் சேர்க்கின்றன. நாளாந்தம் நாம் சாதாரணமாகக் கடந்துசெல்லும் விடயங்களை மற்றொரு கோணத்தில் பார்க்க முயலும் பவித்ரனின் கவிதைகள் சொல்ல வரும் செய்திகளில் இடர்ப்படும் உண்மை எங்களைச் சுட்டெரிக்கிறது.

வாசகனுக்காகப் படையிலிடப்பட்டுள்ள "வெள்ளை இரவு" சொல்லும் செய்திகளைச் செரிக்கமுடியாது அல்லலுறுவது நான் மட்டுமல்ல.. நீங்களும் தான் !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணர்வுகளின் பயணத்தை உயிர்ச் சாலையில்
நகர்த்தும் பவித்ரனின் வெள்ளை இரவு

கொட்டிய ஆரன்

இளங்கலைஞர் திரு. தில்லைநாதன் பவித்ரன் எனும் ஒரு கவிதைப் போராளி. இவனது கவிதைகள் உணர்வுகளின் பயணத்தை உயிர்ச் சாலையில் நகர்த்துபவை. ஒரு பொருளைத் தன் கவித்திறன் கொண்டு பல்விம்பங்களாய் பிரசவித்து விடுகிறவன். இரவு பற்றிய அவனது கவி விரிப்பொன்றில்..

"....இரவின்
தொடக்கத்தையும் அதன் முடிவையும்
பைத்தியக்காரனும் கவிஞனும்
அனுபவிப்பதைப்போல இங்கெவரும் அனுபவிப்பதில்லை..."

"...இரவின் கறுப்பை
பைத்தியக்காரன் தன் உடலில் பூசிக்கொள்ளும் அக்கணத்தில்
கவிஞன்
இரவை குடித்து முடித்து விடுகிறான்..."

இங்கு அகவயம் புறவயம் பற்றிய எழுந்திருப்புகள் அழகாக ஆலாபனை செய்கிறான் கவிஞன். இரவைப் பூசுதல் என்பதில் பித்தனின் இரவு புறவயமானது.. அந்த உணர்வு அப்போதே தோன்றி அப்போதே வற்றிவிடும். ஆனால் இரவைக் குடித்தல் என்பது அகவயமானது. மீண்டும் மீண்டும் அசைபோட்டு அனுபவித்து புதிதுபுதிதாகப் பெற்றுத் தள்ளுவது.

எனவே, இதை GIS மொழியில் கதைப்பதானால் பித்தனின் இரவு ஒரு vector map ஆனால் கவிஞனின் இரவு ஒரு Raster map. பல atribute தகவல்கள் கொண்ட பல லேயர்களைக் கொண்டது. இன்னும் சொல்லப்போனால் பித்தனின் இரவு கோடுபோன்றது ஆனால் கவிஞனின் இரவோ.. பல நுண்ணிளைகள், பல்தள மடிப்புகள் கொண்ட மிக நீண்ட பிரவாகம் என கவிதை எனக்குச் சொல்லி நிற்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவன் நரம்பின் குறுக்குவெட்டைத் துணிவதற்கு இதுவொன்றே போதுமாக இருக்கிறது... பின்நவீனத்துவம், மரபுகளின் தகர்ப்பு என அவன் உணர்வுகளின் பரிமாணத்தை மலினப்படுத்திவிட முடியாது. இவனது கவிகள்.. அவை எல்லாவற்றையும் தாண்டிய ஓர் சுதந்திர வாசம் காணுபவை... சமூகவெளிகளின் ஆழம் ஊடறுப்பவை..

தம்பி பவித்ரனின் கவிப்பயணம் இன்னும் பல காலமைல்களைக் கடக்க வேண்டுகிறேன் ... வாழ்க!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு தனியனின் மொழி

தில்லைநாதன் பவித்ரன்

என்னுடைய சொற்களுக்கு சிறகுகள் இல்லை ஆனால் அவை எப்போதும் என்னை வானவரம்பிலேயே மிதக்கச்செய்கின்றன. எனக்கும் கவிதைகளுக்குமான ஊடாட்டத்தை இவ்வாறு விழிப்பதே பொருத்தமென நினைக்கின்றேன். கவிதை என்பது ஒரு கருவிமொழி. இந்தமொழி கவிஞனிடத்தில் உள்ளிருந்தும், வெளியிருந்தும் உருவாக்கப்படுகின்றது. வடிவம் கொள்கின்றது.

இலக்கியம் எப்போதும் குறிகளின் இலக்கியமாகவே அமையமுடியும் என்று "பார்த்" குறிப்பிடுவதைப்போல இப் பிரதிகளில் அனேகமான வற்றில் குறியீட்டு மொழியை கையாண்டு என் மொழிக்கிடங்கை அகலப்படுத்தியிருக்கின்றேன். ஆனால் அதன் எல்லை வாசகனுடைய சுதந்திரத்திற்கு உரித்துடையதாகவே இருக்கும்.

என்னுடைய இம்மொழியை வெறும் கருத்துப் பரிமாற்றத்துக்கான ஊடகமாக கொண்டுவரவில்லை. இவை முதற்பருவ அனுபவங்களை கடந்து உங்களிடத்தில் பன்மைப்படும் என்று நினைக்கின்றேன். அது வருங்காலத்திற்கான பெரும்பாய்ச்சலை உங்களிடத்தில் நிகழ்த்திச் செல்லும் என எதிர்பார்கின்றேன்.

கவிதையை பொறுத்தவரை அது எப்பொழுதும், கவிஞனுக்கோ, வாசகனுக்கோ அல்லது விமர்சகனுக்கோ உரியதல்ல. இவர்களின் வேலை முடிந்ததும் கவிதை தனக்கான வெளியில் தன்னிச்சை கொண்டு அலையும். காலத்தில் புதியமொழிகளை அதுவே உருவாக்கும். என்னுடைய வரிகளுக்கும் இத்தகைய வலிமை இருப்பதாகவே உணர்கின்றேன்.

எனவே எந்தவொரு வாசக வெளியிலும் எனது கவிதைகள் அலைதல் பற்றி கிஞ்சித்தேனும் என்னிடத்தில் ஐயங்களில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டாவது தொகுப்பு வெளிவந்து பத்தாண்டுகள் கடந்து போன நிலையில் மூன்றாவது தொகுப்பான "வெள்ளை இரவு" வெளி வருகின்றது. இந்த பத்து ஆண்டுகளில் எனது தனிப்பட்ட வாழ்க்கையைப் போலவே எழுத்திலும் மாறுதல்கள் ஏற்பட்டிருக்கின்றன.

இம் மாறுதல்களோடு என் சுயம் கலந்த கலவைகளாக இந்த தொகுப்பு வெளிவரக்காரணமாக இருந்தவர்களையும் என்னோடு பயணித்த, பயணித்துக்கொண்டிருப்பவர்களையும் நினைவில் கொள்கின்றேன்.

என்னுடைய வரிகள் தன்னிச்சை கொண்டலைந்து உங்களிடம் புதிய மொழிகளை உருவாக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெள்ளை இரவு / என்னையல்ல / நினைவுகள் -
பாம்புகள் / முளைத்தல் / நதியாகிக்கடத்தல் / எனது
சூரியன் / மீட்பனுயிர் / காதலின் பாடல் / கடலென
வாழ்தல் / தான்தொன்றி / மழையை எழுதல் / முழு
நிலவின் ஒளி / ஈரவிரல்கள் / காவிநெருப்பு / எமது
பாட்டுக்களைப் பாடுவோம் / அவர்கள் / நதியை
கடத்தல் / நிர்வாணம் / நூற்றாண்டுகளின் நாயகன் /
பெருவெளி / கறுப்பு / யூதாஸின் முத்தம் /
நேசஆலாபனை / ஒளி ஒப்பந்தம் / வெறுமையை
மேவுதல் / அடவி / இரண்டாவது உலகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெள்ளை இரவு

நீண்ட
இரவுகளெல்லாம்
பைத்தியக்காரனுக்கும்
கவிஞனுக்கும் மட்டுமானவை

இரவின்
தொடக்கத்தையும் முடிவையும்
பைத்தியக்காரனும் கவிஞனும்
அனுபவிப்பதைப்போல
இங்கெவரும் அனுபவிப்பதில்லை

இரவின் கறுப்பை
பைத்தியக்காரன்
உடலில் பூசிக்கொள்ளும் போது
கவிஞன்
இரவை
குடித்து முடித்துவிடுகிறான்

பைத்தியக்காரன்
நிலவை தூசனித்து முடிக்கும்
போது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிஞன்
நிலவை உறவு கொண்டு
களைக்கிறான்

ஏகாந்த இரவுகளில்
பைத்தியக்காரனும் கவிஞனும்
தார்ச்சாலைகளில்
கைகோர்த்தபடி
நிர்வாணமாய் திரிகிறார்கள்

அவர்கள்
இரவை
உண்டும் பருகியும்
பசியாறிடாது
ஆயிரம் கேள்விகளை
தம்முள் தொடுக்கிறார்கள்

இரவு
ஏன் கறுப்பாய் இருக்கிறது
வெள்ளை
இரவொன்று இருக்காதா?
பகல்
ஏன் ஒளியால் நிரம்புகிறது?
கறுத்த பகல் ஒன்றைக்
காண முடியாதா?
இந்த பூமி
ஏன் கிழக்காய் சுழல்கிறது?
வடக்காய் சுழலும்
இன்னொரு கிரகம் கிடைக்காதா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பித்தனுள் எழும் ஆயிரம்
கேள்விகளோடு
இரவு
இன்னும் இன்னுமாய்
நீண்டு கொண்ருந்தது

கவிஞனின் பதில்களோ
கவிதைகளாய் முற்றடைந்த
போது

கவிஞனின் வித்துடலுக்கு
பைத்தியக்காரன் சிதை
மூட்டினான்

இரவு வெளுத்திருந்தது...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னையல்ல

இருளடர்ந்த ஓரிரவில்
நீங்கள் என்னை
நெருங்கியிருப்பீர்கள்

என்னை
அடக்கிட முடியாமல்
என்னுடம்பை
கொன்று புதைப்பீர்கள்

நிலவு மட்டுமே
சாட்சியாயாகிப் போன
என் மரணத்தை
உங்கள் மனைவியின்
நிர்வாணங்களை மீறி
இரசிப்பீர்கள்

குடுவை மதுவின் மிச்சத்தை
என்னில் ஊற்றியும்
சுருட்டை புகைத்து ஊதியும்
என்னுடம்பை புதைத்தோ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனமில்லையென்றால்
எரித்தும் விடுவீர்கள்

புதைத்த நிலத்தை..
நிலத்திலிருந்து எழும் விதையை..
எரிந்த சாம்பலை..
சாம்பல் கலந்த காற்றை ..

?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நினைவுகள் = பாம்புகள்

உலக வாழ்க்கை
பாம்புகளால் சபிக்கப்படுகிறது

வாழ்தலின்
ஒவ்வொரு நிமிடமும்
விடம் உடலுருவி
எங்கும் பாம்புகளே நெளிகின்றன

திரிந்து கயிறாகி
இதயத்தை இறுக்கவும்
ஒரு தவளையை போல
வாழ்க்கையை விழுங்கவும்
பாம்புகளால் முடிகிறது
நீண்ட உறக்கத்தில்
பாம்புகள் பிணைந்து
குட்டிகளீனும்

உறக்கம் முழுவதும் பாம்புகள்
ஓராயிரமாய்
பெருகி வழிகின்றன

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாம்புகளை உண்டு அழிக்கும்
ஒரு உயிரியை இந்த உலகம்
கண்டறிய வேண்டும்
அல்லது ஒரு எந்திரமாவது
பாம்புகளுக்கு எதிராக
இந்த உலக இயக்கத்திற்கு தேவை

பாம்புகளை எப்படி கொல்வது..?

பாம்புகளை யார் எதிர்கொள்வது
பாம்புகளை கொன்ற
போதெல்லாம்
அவை
உயிர்த்தெழுந்து
பெருகுகின்றனவே

அதோ
கருகிய பாம்புகளில் சில
தப்பித்து
உங்களைச் சுற்றிக்கொள்கின்றன
என்
கரிய பாம்புகள் உங்களை சுற்றி
வெள்ளையாகின்றன

இப்போது நீங்கள்
உங்கள் மனக்காட்டை
எரிக்க வேண்டும்
பாம்புகளை கொல்வதுதான்
நம் வேலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிந்திக்காது எரித்துவிடுங்கள்
கருகிய அவை
மீண்டும் காண்டவம் போகட்டும்

நம்மால் பாம்புகளைக்
கொல்ல முடியாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முளைத்தல்

கவிஞனின் மரணம்
வெறும்
சாலை விபத்தல்ல

அது பேறுகால தாயின்
பிரசவ நாளைப் போலவோ
ஒரு விடுதலைப் போராளியின்
மரணம் போலவோ இருக்கும்

தேர்ந்த சிற்பியால்
செதுக்கப்பட்ட
கற்சிலையாக
கவிஞனின் கைக்குள்
அவனது மரணம்
செதுக்கப்பட்டுக்கிடக்கும்

மரண நாளில்
அவன் வீடு
வார்த்தைகளாலும்
சொற்களாலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிரம்பி வழிய
கவிஞனின்
நிரந்தர மௌனத்தை
அவன் சகாக்கள்
கவிதைகளாக்குவர்

சில கவிஞர்கள்
கவிஞனின் வித்துடலை
மொழிபெயர்க்க
எங்கும்
கவிதைகளே
ஒப்பாரிகளாய் வழியும்

விருதுகளும்
பாராட்டுக்களும்
சவப்பேழையுள் அடங்கிட
ஊரடங்கிய பொழுதொன்றில்
இறுதி ஊர்வலம் நிகழ்ந்தேகும்

எழுதிமுடிக்கப்படாத
கவிதைகளுக்குள்
அவன் ஆத்மா சஞ்சரிக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நதியாகி கடத்தல்.....

மேடுகள் கடந்து
பள்ளங்களை நிரப்பி
ஓடும் அதன் வழி
வலிகளும் சுமைகளும்
பொருட்டாகா
நதியாகி கழிகிறது வாழ்வு

பெருவெளியில் உறைந்திடாது
கடலைத் தேடும்
நீண்ட பயணத்தில்

என் நதியின் குளிர்மை
என் நதியின் சாரல்
என் நதியின் இனிமை
என் நதியின் தெளிவு
என் நதியின் நலன்கள்
அனைத்தையும்

நீங்கள் அறிவீர்களல்லவா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என் நதியை வியந்து வாழ்த்தி
வாயாற புகழ்ந்து
வரத்துக் குறைய வசைபாடி
இன்னும் இன்னுமாய்
என் குளிர்மையில்
உங்கள் மரங்களில் பச்சை வார்க்க
பண்ணி

நதியின் வலியறியா
பெரு வாழ்வு வாய்க்கப்பெற்றீர்

வாழீர்
கிஞ்சித்தேனும்
என் நதியின் ஆழம் அறிவீரோ
அல்லது
என் நதியின் பாய்வலி அறிவீரோ

நதியின் துடிப்பு
நதியின் உறக்கம்
நதியின் மரணம்
ஏதேனும் ...
அறிந்திருக்கமாட்டீர்கள்
ஏனெனில்

காலப்பெருநதிகள்
ஒரு போதும்
தேங்குவதுமில்லை
உங்கள் முன்
அழுவதுமில்லை ....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனது சூரியன்

நீங்கள்
புதிய ஆடைகளோடும்
பட்டாசுகளோடும்
இந்த ஆண்டின் நாளை
தொடங்கியிருப்பீர்கள்

சில வேளை
ஒரு மதுக்குடுவைக்குள்
சிரிப்பை பருகி
சிவந்த கோழித்துண்டை
சுவைத்தபடியே
ஆசையின் ஊனம் வடிய
காமத்தின் விதிகளையும்
கடந்திருப்பீர்கள்

பழையதை சுமத்தல்
அபத்தமானதால்
பழமையின் நினைவுகளை
சம்மட்டி கொண்டடித்து
மறக்கச்செய்திருப்பீர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீங்கள்
அத்தனையும்
மறந்துபோன இரவில்
நான்
உங்கள் குளுமைக்கான
நிலவையும்
விடியலுக்கான
சூரியனையும்
எடுத்து வந்திருக்கிறேன்

உங்கள்
புதிய உலகத்தின்
புதிய வாழ்வுக்காக
நிலவையும் சூரியனையும்
கடவுளைத்தவிர
ஒரு கவிஞனால் மட்டுமே
கொண்டுவர முடியும்

நாளை
எனது சூரியன்
உங்களுக்கான விடியலை தரும்
உங்களது இரவில் எனது நிலவு
குளமையை விரிக்கும்

அப்போது
சூரியசந்திரர்கள்
எனக்கானதாய் மட்டுமல்லாமல்
நமக்கானவையாக இருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீட்பனுயிர்....

படுக்கை விரிப்புக்களின்
அலங்கோலத்தில்
வாழ்வின் அசிங்கங்கள்
தொங்கிக்கொண்டிருக்க
விடிந்திருக்கிறது - இந்தக்காலை

முன் எப்பொழுதும் இல்லாமல்
ஒரு மழைப்பொழுதின்
தேநீர் கசத்துப்போக
கைபடாமல் கிடக்கிறது
தேநீர் குவளைகள்

மரணத்தின் வாசனை
காற்றோடு கலந்து வந்து
மழையென பொழிந்து வழிகிறது

இந்த மழையை
தேர்ந்த கவிஞனால் கூட
இரசிக்கவோ எழுதவோ
முடியாமல் போகும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சபிக்கப்பட்ட உலகத்தின்
மீட்பன் ஒருவன்
ஜீவசமாதி அடைய
இனி வந்து
எங்கும் பரவி அழிக்கும்
பரலோக நெருப்பை
எந்த கவிஞனால் இரசிக்க முடியும்

இருந்தும்
மீட்பர்களைக் கொன்றே
பழக்கப்பட்ட உலக ஒழுங்கில்
காலந்தோறும் மீட்பர்கள்
மீள்வார்கள் - மரணிப்பார்கள்

ஆழ்துளையுள் போன
மீட்பனின் உயிரை தேடுங்கள்
அது ஒரு வேளை
பெத்தலகேம்
மாட்டுத்தொழுவத்தில்
ஆக்ராவின் மதுராவில்
மீண்டும் உயிர்க்கக்கூடும் .....

ஆர்ஜென்டீனாவிலோ
வால்கா நதி ஓரமோ

அல்லது
வல்வெட்டித்துறையிலோ
பிறக்கக்கூடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காதலின் பாடல்

இருள் எங்களை
போர்த்தத் தொடங்கிய
பொழுதில்

சிற்றலைகள் மோதும்
கரையொன்றில்
கால்களை புதைத்திருந்தோம்

எங்கள் மடியில்
மறைந்து போன சூரியனின்
வெம்மை
இன்னும் குறைவதாயில்லை
ஆனால்
நிலமும் குளமும் காற்றும்
குளிர்ந்தேதான் இருந்தன

தூரத்தில்
ஒளிர்ந்த நட்சத்திரத்தில்
எங்கள்
பெயர்கள் எழுதப்பட்டிருந்தது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் தேயாத சூரியனை
அவளுக்குப் பரிசளித்தேன்

பதிலுக்கு
குளிர்ந்த மழையை
அவள் திருப்பித்தந்தாள்

நான்
குறிஞ்சிப் பாட்டிசைத்தேன்
அவள்
முல்லைப் பண்ணிசைத்தாள்

காதலின் கீதம் காற்றில் பரவிட
கைகளை
இறுக்கிக்கொண்டே
தோழா
நீ என் மீது கொண்ட
அன்பினாழம் எவ்வளவென்றாள்

காலம் தாண்டி வாழும்
மலைகளையும்
பெரு மரங்களையும்
ஆதியின் ரகசியங்களை
அறிந்த குளத்தினையும்

எங்கள் பெயர் எழுதப்பட்ட
நட்சத்திரத்தையும்
அதனோடு சேர்த்த
வானத்தையும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்டிய பின்
மௌனமாயிருந்தேன்

தூரத்து மருதத்தில்
நாரை தன் துணையை
முத்தமிட்டுக்கொண்டிருந்தது

இருள் எங்களை
முழுதாய் போர்த்தியிருந்தது

எங்கள் கால்கள்
எங்கள் தாய்நிலத்தில்
இன்னும் ஆழமாய்
வேரூன்றியிருந்தன....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடலென வாழ்தல்

பெரும் பனித்திணிவாய்
உறைந்து கிடக்கிறது
கடல்

அலைகளேதுமற்ற
சலனமில்லா வெளியில்
அசையாது
நிறுத்தி வைக்கப்பட்ட படகுகளை
சிலர்
இரசித்துக்கொண்டிருக்கிறார்கள்.

இன்னும் சிலர்
ஓடியாடுகிறார்கள் ....

யாருக்கும் தெரிவதாயில்லை
கடலின் வலி!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முழுநிலவின் ஒளி

ஒருமுறையேனும்
கண்களை திறக்காத
சித்தார்த்தர்
தன் கண்களை
என் கனவில் திறந்தார்..

ஓ மன்னிக்க!

புத்தர் பெருமான்
தன் கண்களைத் திறந்தார்

தம்மபதமும்
திரிலோகவதமும்
திரிபீடகமும்
கொண்டு எழுப்பப்பட்ட
அக்கினியின் வெக்கையை
அவரால் தாங்கிக்கொள்ள
முடியவில்லை

ஐம்பத்தியாறுகளின்
எண்பத்தியேழுகளின்
அல்லது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொண்ணூறுகளின்
வெக்கைதான் என்று
அதுவரை கண்மூடியிருந்தவர்
இதுவரை உணர்த்திடாத
வெம்மையை உணர்ந்தார்
நிர்வாணங்களை
துறவிகள்
எப்படிப் பார்ப்பதென்றும்
தயங்கினார்

இதுவொன்றும்
கிரிஷாந்தியினதோ
மன்னம்பேரியினதோ
அல்லது
உடலில் துணியகற்றி
ஓராயிரம் இராணுவ வீரர்களை
கடந்த வன்னிமகளின்
நிர்வாணமோ
இல்லை என்பதனால்
அகலமாய் கண்களைத்
திறந்து பார்த்தார்

அது
தனது நிர்வாணம்
என்பதை உணர்ந்தபடியே
நடக்கத்தொடங்கினார்

திடீரென்று ஓடி வந்த
அப்புக்காமி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரையில் தள்ளிவிட
தன் சீடன் சாரிபுத்திரன்
துணையோடு
மீண்டும் எழுந்து நடக்கிறார் புத்தர்

சீடர்கள் மெதுமெதுவாய்
அவரை விட்டு விலகி
ஓடத் தொடங்கினார்கள்

உபாலியும்
சுபூதியும்
அனுருத்தரும்
புத்தர் பெருமானை
சம்புகோளத்துறைமுகத்தில்
எழுநூறு தோழர்களோடு
நிறுத்திவைக்கப்பட்ட கப்பலில்
ஏற்றிவிடுகின்றனர்

லும்பினிக் கரையில் இறங்கி
வீடு நோக்கி நடக்கும்
புத்தர் பெருமகனாருக்கு
உடலும் மனமும்
களைத்துவிட்டது

மீண்டும் சுஜாதையிடம்
மோர் குடிக்க வேண்டும்
போலுள்ளது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீண்டும்
அரசமரத்தடியில் இளைப்பாற
வேண்டும் போலுள்ளது
இருந்தும்
தன் வீடு நோக்கி விரைவாய்
நடக்கிறார்

வீட்டை அடைந்து
கதவுகளைத் தட்டிப்பார்க்கிறார்
கதவுகள் திறப்பதாக இல்லை
தன் வீட்டு சுவர்களை
ஏறித்தாண்டி
உள்ளே இறங்குகிறார்
புத்தர் பெருமான்

ஓ மன்னிக்க

தன் வீட்டு சுவர்களை ஏறித்தாண்டி
உள்ளே இறங்குகிறார்
சித்தார்த்தர்

உள்ளே
சிரித்த முகத்துடன்
மனைவி யசோதரை
பாற்சோறு
சமைத்துக்கொண்டிருந்தாள்
மகன் ராகுலன்
வெசாக் தோரணங்களை
கட்டிக்கொண்டிருந்தான் ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான்தோன்றி..

இரவு வானில்
சூரியன்
உதித்துக்கொண்டிருந்தது

நிலவு
பக்கத்துக் கிரகத்தில்
பகலை விசாலித்தபடி
இருக்கின்றது

மழையின் வெம்மைக்கு
ஒரு குளிர்நீரும்
வெயிலின் குளிர்ச்சிக்கு
ஒரு சுடுநீரும்

கனவில் உறக்கமும்
உறக்கத்தில் விழிப்பும்

இன்றைய தேவையாய்
இருக்கின்றது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணவின் பின்னரே
அதிகம் பசிக்கிறது
பசித்த பின்னர் உணவு
தேவையற்றதாகி விடுகிறது

இப்படித்தான்
இந்த வாழ்வை
வாழ்ந்து
தொலைக்க வேண்டியுள்ளது...

இதற்கிடையில்
பிரம்மன்
ஒவ்வொரு முகம் கொண்டும்
தன் மனைவியோடு
மூன்று முறை கலவி
கொள்கின்றான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மழையை எழுதல்

தன்னை எழுதாததால்
மழை
என்மீது கோபித்துக்கொள்கின்றது

இப்போதெல்லாம்
என் முற்றத்தை
அது நனைப்பதில்லை

மழையின் கோபத்தால்
எனக்கு
குடையோ
மழை அங்கியோ
தேவைப்படுவதுமில்லை

மழை வேண்டுமென
நான் எதிர்பார்க்கின்ற போது
மழைக்கான அழகிய கவிதை
என்னிடமிருக்கும்

அப்போதெல்லாம்
மழை வருவதில்லை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மழையின் மீது எனக்கு
கோபமாயிருக்கும்
அதன் ஏமாற்றம்
அதன் துரோகத்தை
நான் ஒரு போதும்
மன்னிப்பதில்லை

ஏன் நான்
மழையை எழுத வேண்டும்?
மழையை எழுத
ஆயிரம் கவிஞர்கள்
இருக்கிறார்களே
மழையை எழுதுவதால்
ஆயிரம்
கவிஞர்கள்
பிறக்கிறார்களே...

இருந்தும்
மழை ஒரு பிடிவாதக்காரி
என்னை
கவிஞனாக்கியே தீர
இப்போதெல்லாம்
அடிக்கடி பெய்கிறது...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈரவிரல்கள்

கறுப்பாய் வடியும் இரவில்
உன்னை
என்னில்
வரைந்து கொண்டிருக்கிறாய்

நீ அறியாமலே
உன் கண்களால்
நான் அழுதுவிடுகிறேன்

ஆனால்
நீ வரைந்த என் ஓவியம்
நூற்றாண்டின் பொக்கிசமாய்...
சிரித்தபடி இருக்கிறது

ஈரம்
மறு முனையில்
உன் கண்களில்
ஒரு ஓவியத்தை
வரைந்திருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காவி நெருப்பு

எந்த மழையிலும்
அந்தத் தீ
அணைந்து போகவில்லை
அவர்களதை
தம் அடி நெஞ்சில்
பதுக்கி வைத்திருக்கிறார்கள்

அந்தத் தீயை
நீங்கள்
அறிந்திருக்கிறீர்களா?

அன்றோர்நாள்
ஆயிரம் காலத்து
அறிவுச்சுரங்கத்தை
எரித்த நெருப்பு அது

உங்கள் வீடுகளை
உங்கள் உடமைகளை
உங்கள் உயிர்களைத் தின்று
ஜீரணிக்காத பெருந்தீயது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பசுங்காடுகள்
எதையும் ஏற்காது
பாலை மனமே தாங்கி
பகையாய் எமக்கெதிரே
அவ்வப்போது எரிந்துவிடும்

அத்தீயை
அக் காவிநெருப்பை
அணைக்கும் ஒரு நவீன மழை
எங்கள் தேசத்தில்
இது நாள் பெய்ததில்லை

அந்நெருப்பை
உங்களால்
என்ன செய்ய முடியும்
காவி நெருப்பை
எவ்வாறு அணைக்க முடியும்

உங்களிடம்
மழை இருக்கின்றதா
அதுவும்
பெருமழை இருக்கின்றதா
அல்லது
தீ இருக்கின்றதா?
அதுவும்
பெருந்தீ இருக்கின்றதா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது பாட்டுக்களை பாடுவோம்

செம்மண்ணின்
வேர் பற்றி
படர்ந்துகிடக்கிறது
காந்தள்

மஞ்சளும்
சிவப்புமாய்
இலட்சியத்தின் நிறங்களில் ஊறி
விடுதலைக்கீதத்தை
இசைத்தப்படி
வேட்கை தணியாது
காற்றிலாடுகிறது

காந்தள்களைப் போலவே
நாமும்
வேர் பற்றி படருவோம்
இலட்சியத்தின்
நிறங்களில் ஊறி
வேட்கை தணியாது
ஆடுவோம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒற்றைக்கனவில்
மூர்ச்சித்தவர்களின்
நினைவுகளை
தாங்கிய நாளில்
அவர்களுக்கான
எமது பாட்டுக்களை பாடுவோம்

வாருங்கள் தோழர்களே
அவர்களுக்கான
எமது
பாட்டுக்களை பாடுவோம்

காந்தள்களை போலவே
வேர்பற்றிப் படர்ந்து
மஞ்சளும்
சிவப்புமாய்
நிறங்களில் ஊறி
வேட்கை தணியாது
ஆடுவோம்....

நாமும்
நமது கீதத்தை இசைப்போம்

விடுதலைக்கான
நமது பாட்டுக்களைப் பாடுவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள்

பல்லாயிரமாண்டு
கால பகையை
தங்களின்
வேதத்தில் சேர்த்து
உச்சாடித்தவர்கள்

தொல் வேதத்தின் உண்மையை
பொய்யாக்கியபடியே
வெள்ளிகள் தோறும்
விளக்கினார்கள்

இறைமகனின் பெயராலும்
அவர் தம் இறுதித்தூதனின்
பெயராலும்
தக்பீர் ஓதி தகாதன செய்தார்கள்

அவர்களின்
உம்மத்தை தனிமைப்படுத்திவிட்டு
ஓர் புது சுவனம் தேடினார்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகையை
உண்ணலிலும் பருகலிலும்
சிறிது தொட்டுக்கொண்டார்கள்
ஓரிடம்விடாது
உடன் கொண்டும் சென்றார்கள்

வேதத்தின் வடங்களோடு
பகையை சேர்த்து
வெடிகுண்டுகளாக்கி
வெடித்துச் சிதறினார்கள்

அதோ
அவர்களின் தொல்மறை
மௌனித்துக்கிடக்க
ஏதுமறியா உம்மத்து
நரகத்தரையில் புரள்கிறது ...

எங்கள் பிதாவே
நீர் அவர்களுக்காகவும்
வேண்டிக்கொள்ளும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நதியை கடத்தல்

தோழனே
நாமிருவரும் பெருநதியை
ஒன்றாக கடப்போம்
வாழ்க்கை கடலின் ஆழத்தில்
கரைந்து போன நமக்கு
நதியின் ஆழம் பொருட்டல்ல

நெடுநீண்ட பயணத்தில்
இரவின் குளிர்மையையும்
பகலின் வெய்யிலையும்
பருகி வளர்ந்த எம்மை
அலைகடலும் அடர்காடும்
அன்றேதும் செய்ததா

இந்நதி
எமக்கொரு பொருட்டல்ல
கைகோர்த்தபடியே
ஒன்றாய் கடந்து விடலாம்
பிரிவினைகளால்
பிளந்து கிடக்கும் பழையகரை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனி எமக்கு வேண்டாம்
உரிமைகள்
மண்ணூன்றிக் கிடக்கின்ற
நமக்கான கரையை
நாம் அடைய வேண்டும்
நம் வாழ்வின் வசந்தங்களை
அடைய
அத் தனிக்கரையே
நமக்கு அடியாயிருக்கும்

தோழனே!

இரவின் கோடியில்
இந் நதியை கடந்து விடுவோம்
விடியலில்
எம் ஈரங்களை உலர்த்த
நம் தோழர்கள் சூரியனை
சிறைப்படுத்தியிருப்பார்கள்

வா
நாமிருவரும்
ஒன்றாய் கடப்போம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிர்வாணம்

குறிகள் வலுவற்ற சிலர்
எங்கள் நிர்வாணங்களை
தங்கள் கனவில் கண்டார்கள்

எங்கள் உள்ளாடைகளை
களவாடி மோந்த படி
கைகளால் தடவி அசைத்து
எங்கள் குறிகளை அளந்து
தங்கள் குறிகளை
ஏற்றியும் இறக்கியும்
மேலும் கீழும் அசைத்தும்
ஒப்பனை செய்து கொண்டார்கள்

எங்கள்
நிர்வாண நினைவுகளோடு
தம் துணைகளோடு
புணர்ந்த பின்னர்
தம் குழந்தைகளை பார்த்தபடி
சொல்கிறார்கள்

அவற்றின் நிர்வாணம்
எங்களை
ஒத்திருக்கின்றதென்று.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூற்றாண்டுகளின் நாயகன்

நான்
யாரென்றே அறியா நாட்களில்
அவன்
எனக்கான பாதைகளை
உருவாக்கி நடந்தான்
நாளொரு பொழுதாய்
எல்லைகளை கடந்தான்
காற்றாய் கடலாய்
ஒளியாய் வியாபித்தான்

அவன்
பகல் சூரியனின் நம்பிக்கையில்
இரவுகளுக்காக
ஓராயிரம் விண்மீன்களால்
தீப்பந்தமொன்றைச் செய்த
நூற்றாண்டுகளின் நாயகன்

கற்களில்லா பாதையொன்றை
எனக்காய் செதுக்கி
அதில் எமக்கான சூரியனை
காட்டி மறைந்தான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த
ஒற்றைச் சூரியனின்
கதகதப்பில்
எங்கள் ஈரங்களை உலர்த்தும்
நாளொன்றுக்காக
எமக்கான பாதையில் நடக்கிறேன்

இரவில்
அவன் தந்த தீப்பந்தங்களோடும்
பகலில்
அவன் காட்டிய
ஆயிரம் கிரணங்கள் தெறிக்கும்
ஒற்றைச் சூரியனோடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாங்கள் மௌனித்த
பெருவெளிகளில்
உங்கள் வானம்
உடைந்து போகும் சத்தத்தை
ஓர் நாள் கேட்பீர்கள்

உங்கள் நிலத்தின் மேல்
பிணந்தின்னிகள்
திரியுமன்னாளில்
வலிகளின் வரி சுமக்க
உங்களில் ஒரு கவிஞன் இரான்

மலையும் மழையுமாய்
ஒரு நாள் அழித்து முடிக்க
நீங்கள் சேமித்த பாவங்கள்
மற்றொரு நாள் வெடித்து
அழிக்கும்
கவலைப்படாதீர்கள்
சொந்தங்களே
நாங்கள் ஒருபோதும்
பாற்சோறு கிண்டோம்
பரிமாறோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கறுப்பு

இரவை
சாபத்தின் புதல்வர்களே
புசித்திருக்கிறார்கள்

வாசனை பூசிய பதாதைகளால்
நிலவின் ஒளியை மறைந்து
இருட்டின் மடியில்
சாமகீதமிசைத்தபடி
சதைகளை இழுத்து
புசித்திருக்கிறார்கள்

விடியலில்
எச்சில் எலும்புகளை
நாய்கள் சில
நக்கியும் கடித்தும்
இன்னும் சில
நக்காது கடிக்காது
குரைத்தபடியிருக்க

உலகம் அழியும் ஒரு நாளில்
உரைப்பதற்கென்று
நிலவு கூறும் சேதிகளை
சூரியனோடு வானமும்
கேட்டுக் கொண்டிருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யூதாஸின் முத்தம்

யூதாஸ்
சிலுவையை சுமக்கும்
நாளொன்றில்

யேசுவின்
சட்டைப்பைகளில்
முப்பத்தியொரு
வெள்ளிக்காசுகள் இருந்தன

அன்று

ஏரோதின்
அரண்மனையில்
ஒளியேற்றி விட்டு
தென்கடலில்
ஒளிந்தது சூரியன்

எருசலேத்தின் இரவுகள்
நிலவற்றுப்போய்
முப்பத்தியொரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நட்சத்திரங்களின் ஒளியானது
யூதாஸின்
தலையிலேற்றப்பட்ட
முள்முடியில்
உபகாரிகளின்
உலகம் பரவசப்பட்டது

கல்வாரி பாதையில்
யூதாசுக்கு விழுந்த
ஒவ்வொரு கசையடியாலும்
கிழித்தெரியப்பட்டது
யேசுவின் முத்திரை

நாள் நான்கில்
யூதாஸ் உயிர்த்தெழுந்த போது
யேசுவின் கால்களில்
யூதாஸின் எச்சில்
துளிகளிருந்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேச ஆலாபனை

குளிர் இரவில்
தன் இயலாமையின்
எல்லையிலும்
உறையாதிருக்கிறது நம் தேசம்

கால வேள்வியில்
கனன்று கொண்டிருக்கும்
பரலோகத் தீயில்
எரிந்த எம்மிடையே
தீண்டியும் தீண்டாமலும்
விலகி நிற்கிறது குளிர்

அன்பே
துளியளவும் உறையாதிருக்கும்
காதலின் சாட்சியாக
இரவின் கோடி முழுவதும்
வான் மழை
உன்னை பெய்தபடியிருக்கிறது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேரலைகள் மீண்டெழும்
நம் வாழ்வில்
இன்னும் நாம் கரைகளையும்
கடக்காதிருக்கின்றோம்

வா
இனியும்
நம் பிணைப்பின் நரம்புகளை
இறுகமுடித்து விட்டு
கட்டவிழ்க்கப்படாத
காகித விதிகளை பார்த்துச்
சிரிப்போம்

வழமை போல
எனக்குள் நீயும்
உனக்குள் நானுமாய்
ஆயிரம் முத்தங்களை
பரிமாறிக்கொள்வோம்

நேசம் பனியால் ஆனாலும்
நம் நேசம்
உறையாதிருக்கட்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒளி ஒப்பந்தம்

அந்திப்பொழுதொன்றில்
ஞாயிறை கண்டவர்கள்
சிரித்தார்கள்

வானின் அடியிலும்
கடலின் விளிம்பிலும்
அது மறைவது கண்டு
கொண்டாடினார்கள்

ஞாயிறு இல்லா விடியலை
சூரியமரணம் எனப்
பெயரிட்டார்கள்

தம் விடியலை
தொலைத்தல் பற்றி
அவர்களிடம்
எந்த உரையாடலும்
அப்போது
இருந்திருக்கவில்லை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாற்றுச்சூரியனும் இல்லாத
இடைவெளியில்
சூரிய மறைவை
கொண்டாட துணிந்தார்கள்

நீண்ட உறக்கத்தின்
பின்னிரவில் வந்த
பேரொளியின் இளவலைக் கண்டு
மனம் சஞ்சலித்து
தங்களைத் தாமே கிள்ளி
உணர் நிலையை சரிசெய்து
கொண்டார்கள்

பேரிருள் கிழித்து வரும்
ஞாயிறைப்
பார்க்கவும் முடியாதவர்களாய்

மறுநாள் அந்தியில்
அதன் மறைவைப் பார்த்து
கொண்டாடினார்கள்
சலன உறக்கத்தின் பின்னிரவில்
நிலவுடன் ஒளி ஒப்பந்தம்
செய்து கொண்டார்கள்

பின்னும் சிரித்தார்கள்
சூரியன் வந்தது
அவர்கள் சிரித்தபடியே
இருந்தார்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால்
எட்ட முடியாத வானத்தின் மீதும்
ஏற முடியாத மலைகளின் மீதும்
தாண்ட முடியாத கடல்களின்
மீதும்
சூரியன் வந்து
கொண்டிருந்தான்

இன்னும் அவர்கள்
காகக் கூடுகளில் இருந்து
சிரித்துக் கொண்டுதான்
இருக்கிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெறுமையை மேவுதல்

இன்றிலிருந்து
உலகு சபிக்கப்படுகிறது
மரணம்
காற்றில் கலந்து வர
எல்லோரும்
உங்கள் சாளரங்களை
திறந்து வையுங்கள்

இரக்கமில்லாத
இவ்வுலகு
இனி யாருக்கு வேண்டும்
நாம்
மரணத்தை பருகுவோம்
மறுமையை அடைவோம்

இந்த உலகம்
பாவமேவியது
நாம் எல்லோருமாக
மரணத்தை சுவாசிப்போம்

நிலவு மரணித்துப் போகையில்
வெறுமை மேவிய வானத்தை
யார் இரசிப்பது ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடவி

இலைகள் அசையாத
நிசப்த இரவில்

கறுத்த
தார்வீதிகளில்
வெப்பம் குளிக்கும்
யானைகளைப் போல

உன்னை
மீட்டிக்கொள்கிறேன்

ஆனாலென்ன

நமதான நேசம் என்பது
பெரு வனத்தின்
குளிர்மையாலானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டாவது உலகம்

உலகத்தை கிழித்து
வெளிவந்து
யாருமற்ற
கிரகம் ஒன்றில் போய்
வாய் குழறி அழ வேண்டும்

திக்குகளுக்கெல்லாம்
தீவைத்து விட்டு
நிலவில் கல்லெறிந்து
சூரியனில் நீர் ஊற்றி

பூக்களை தணலிட்டு
புன்னகிக்க வேண்டும்
குறைந்தபட்சம்
என்னில் வலிமையில்லா
உயிரியொன்றை
துடிக்கத் துடிக்க சாகடிக்க
வேண்டும்.

இவ்வளவுதான்
இப்போதைக்கு
பெரிதாய் ஒன்றுமில்லை ....

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பவித்ரன் அவர்களின் கவிதைகள் தமது கட்டமைப்பில். சமூகம் மீதான அவதானிப்பினூடே. அதன் சமகால அசைவியக்கங்கள் மற்றும் அவலங்களை பேசுபவை.

இந்த கவிதைகள் மற்றும் அதன் வாசிப்பு பின்பான யோசிப்பு என்பன என்னுள் ஒரு வெற்றிடத்தையே உருவாக்கி சென்றன. எனது வாசகநிலை அனுபவம் இது. ஏனெனில் அவை கிளர்த்தும் அனுபவங்கள் அவ்விதமானவை.

ஆனால் இந்த கவிதைகளின் மொழி சார்ந்த வாசக அனுபவம் சட்டென அந்த வெற்றிடத்தினை நிரப்பி விடுகின்றது. ஆக பவித்ரன் அவர்களின் கவிதைகள் கருத்தியல் மற்றும் மொழியியல் சார்ந்து இடையறாத இயக்கத்தினை வாசகனுள் நிகழ்த்தி கொண்டிருக்கின்றன.

லலிதகோபன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனால் இவை காட்சியாகவும் படிமங்களாகவும் நேர் நின்று உரையாடும் குரலாகவும் மாறி ரூபம் கொள்கின்றன. காலத்தைப் பிரதிபலிப்பதாகவும் காலத்தைக் கடந்து நிற்பதாகவும் மாறி மாறி கோலம் காட்டும் இந்தக் கவிதைகளில்
நம்காலத்தின் ஒளியையும் நிழலையும் கூடக் காணலாம். இந்தக் குரலுக்கு, இந்தச் சொற்களுக்கு, இந்தக் காட்சிகளுக்கு, இந்தப் பயணத்துக்கு நம்மைத் தயார்ப்படுத்திக் கொண்டால் நன்மைகள் அதிகம். அதிசயங்கள் அதை விட கூடுதல்.

-கருணாகரன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org